தமிழ்ப் பொழில்

ஐம்பத்துமூன்றுந் துணர் — உள்ளுறை.

		பக்கம்
1	அசையும் பொருளும் டாக்டர் கு. மோகனராசு, எம், ஏ.	80
2	அபிராமி சமயம் திரு. க. சோமசுந்தரம் பிள்ளை, பி ஏ; பி.எல்,	2, 123, 170
3	'அழனும் - புலனும் டாக்டர் ஏ, ஆதித்தன்	
4	இந்தி கட்டாயமில்லை திரு, வி. பொ. பழனிவேலனார்	11
5	இறைவன் அருளும் இயல்பு திரு, தி. கோ. பஞ்சாபகேசம் பிள்ளை	184
6	'இன்' எனப்பெயரிய வேற்றுமைக் கிளவி திரு, டாக்டர் ஏ, ஆதித்தன்	113
7	கவிக்கூற்று திரு. தெ, துரைசாமி, எம், ஏ,	109
8	கான் சாயபு சண்டை திரு, கோ, தெய்வநாயகம், எம்.ஏ; எம்,பில்.	53, 97, 127, 187
9	குறிஞ்சித் தலைமகள் திரு. இரா, சுந்தரமூர்த்தி, எம்.ஏ.	7
10	குறிஞ்சிப் பாட்டு திரு. க, சோமசுந்தரம் பிள்ளை, பி,ஏ; பி,எல்,	35, 68
11	குற்றியலுகரம் பாவலர் திரு, ச, பாலசுந்தரம்,	155, 207
12	'கெழு' வும் 'கேழும்' டாக்டர் ஏ, ஆதித்தன்	
13	சிலையில் கலை பேராசிரியர் திரு, சி, கோவிந்தராசனார்	150

14 சோழர் காலக் கலையும் - பண்பாடும் 26
புலவர் திரு, கோ, சின்னையன்

15 தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் 105
திருத்துறைக்கிழார்

16 தமிழ் வாழ வளர 135
திருத்துறைக்கிழார்

17 'து' என்னும் விகுதி 33
பேராசிரியர் திரு, கோ, வேங்கடாசலம்,எம்.ஏ,

18 தொல்காப்பியரும் சார்பெழுத்துக்களும் 15, 35
பாவலர் திரு. ச, பாலசுந்தரம்

19 பரிப்பெருமாள் - ஒரு மதிப்பீடு 165
திரு, கு, சிவஞானம், எம்,ஏ.

20 பறம்புமலையும் பாரீசுரமும் 75
பேராசிரியர் திரு. கோவிந்தராசனார்

21 பாரதிதாசனின் நாடகங்கள் - ஓராய்வு 19
திரு, கோ, தெய்வநாயகம், எம் ஏ; எம். பில்,

22 பொருநராற்றுப்படையில் சொற்கூறுகள் 177
திரு, பா, வீரப்பன், எம்,ஏ; எம்.பில்,

23 முல்லைக்கலித்திறன் 116, 144
திரு, இரா, சுந்தரமூர்த்தி, எம்,ஏ,

24 'வய' வும் 'மத' வும் 65
திரு, டாக்டர் ஏ, ஆதித்தன்

செய்திகள் :

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள்
தொடக்க விழா 120
கலைமகள் விழா 94
பொங்கல் வாழ்த்து 149

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௲௧௰	மலர்
	சித்தார்த்தி - சித்திரை, வைகாசி	
௫௩	1979 ஏப்ரல், மே. சூன்	௧ ௨

வேண்டுகிறோம்

சித்திரை மகள் ஆண்டுதோறும் காலமென்னும் மேடையில் மணம்பூண்டு மன்பதைக்கு இயற்கைவளத்தை ஊழ்முறையில் அளித்து வருகின்றாள். இற்றைக்குச் சித்தார்த்தி என்னும் மணமகனோடு கூடிக் காலமென்னும் பேரரங்கிற் களிநடம் புரிய வருகின்றாள்.

சித்தார்த்தி என்னும் தமிழ்த்தொகைச் சொற்கு உள்ளத்தை நிறைவிப்பது என்பது பொருள். அவ்வாறே இவ்வாண்டு அரசு முதல் குடிமக்கள் வரையுள்ள யாவருடைய உள்ளத்தையும் நிறைவு செய்யும் வகையில் பகையும், பிணியும் பசியும் நீங்கவும் வளமும் மழையும் அறிவும் ஓங்கவும் துணைபுரிய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பல்வேறு இடையூறுகளுக்கிடையே நமது தமிழ்ப்பொழில் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் மக்களுக்கும் ஆற்றவேண்டிய தொண்டுகளை இயன்ற அளவு செய்து வருகின்றது. பொருள் முட்டுப்பாடு முதலிய காரணங்களால் காலத்தோடு ஒவ்வொரு இதழினையும் வெளிப்படுத்த இயலாத நிலை எங்களுக்கு வருத்தத்தைத் தருகின்றது. இனி விரைந்து உரிய காலத்தில் வெளியிடுவதற்கு ஆவன செய்ய முயல்கின்றோம். பொறுப்பும் பொறுமையும் சான்ற பொழிலன்பர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்து மேலும் மேலும் எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து தமிழ்ப் பணியில் எங்களை வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறோம். வணக்கம்.

பொழிற்றொண்டர்.

அபிராமி சமயம்

K. சோமசுந்தரம, B. A., B.L., தஞ்சை

சமயம் எனும் சொல் காலம் அல்லது பொழுது என்ற பொருளை யுணர்த்தும், சமயம் பலதிறப்படுமென்பது வாழும் மக்களுயிர் ஓரோர் இந்திரியத்தின் வழி ஓரோர் பொருளை ஓரோர் அவசரத்தில் அறியும் சமயங்கள் மூலம் தெளியப்படும். ஆனல் நிலையின்மையாய மக்கள் யாக்கைக்குரிய ஐவகை இந்திரியங்களும் அவற்றின் அறிவுகளும் நிலையற்றனவாதலான், தமிழ்ச்சான்றோர், 'நானர்? என்னுளமார்? ஞானங்களார்? என்னையாரறிவார்? வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்' என எங்ஙனும் எஞ்ஞான்றும் இயல் பாக எழும் தத்துவ ஆய்வுப்பியும் அவசரமே சமயம் எனக்கொண் டார்கள். இங்ஙனம் நாளடைவில் மக்களின் அறிவினலும், ஆய்வி னலும், சிந்தனைத் தெளிவுகளினலும், கோட்பாடுகளினலும், ஒழுக்க நெறிகளினலும் பலதிறப்பட்டு எழுந்த உண்மைகளும் அறவாழ்வு பற்றிய கொள்கைகளும் நிலைநாட்டப்படவே, எண்ணி றந்த சமயங்கள் சித்தாந்தங்களுடன் பலவாய் விரிந்து ஒன்ரே டொன்று மாறுபாடு கொண்ட வேறுபாடுகளுடன் மண்டியுள்ளன. இன்னணம் விரிந்த சமயங்களை நம்முன்னேர்கள், அவற்றுள் பொது வகையாகக் காணப்படும் கொள்கைகளுள் இயைந்தவற்றைத்தழுவி சமுதாய மரபு அமைப்புக்கேற்ப, அறுவகைச் சமயங்களாக வகுத்த னர். இவ்வாறு வகுத்த அறுவகைச் சமயங்களில் அடங்கியும் அடங் காதும் விரிந்து திகழும் உண்மைக் கொள்கைகளாகிய மெய்ப் பொருள், மெய்ந்நெறி, மெய்ப்பயன் ஆகியவற்றை அபிராமி சமயம் வலியுறுத்தித் துலங்குகின்றதினல் அதனைப் பற்றி ஈங்கு விளக்கு வாம்.

தத்துவ ஆய்வினைச் செய்யத் தொடங்கிய சமயத்தில் எழுந்த அறு வகைச் சமயங்களுக்கு அபிராமி அம்மையாரைத் தலைவியாகக் கொண்ட பட்டர் ('சமயம் ஆறுந் தலைவியிவளாயிருப்ப'-63) அச்சம யங்களின் மயக்கங்களையும் மறக்கத்தக்கற்குரியென என்பதை, சக்தி வழிபாட்டின் வலியுறுத்திக் காட்டும் அபிராமி சமயத்தின் பிரமாணங்களை உள்ளம் தெளியுமாறு நிறுவியுள் ளார். சமயவாதிகள்தம் அறிவுக்கெட்டிய ஒவ்வோர் குறையியல்பினை மனத்துட்கொண்டு தம்தம் மதங்களை அமைவதாக அரற்றிமலைந் தாலும் அவ்வாதங்கள் யாவும் பட்டரின்முன் வலியிழந்து குன்றும் பான்மையன. எனவே அபிராமி சமயத்தின் நுண்பொருள்கள் யாவை என்பது சிந்தித்துணரத்தக்கது. சுருங்கக்கூறின், மயக்கங்

களால் சுழற்சியினையடையும் இயல்புடைய மனம் துன்பத்துயருற்று கெட்டொழியாது ஓர் வழிப்பட்டு பக்தியும் ஞானமும் உத்தம நிலையில் ஓங்க இறைவியைப் பற்றுக்கோடாகப் பிணித்து வைத்துக் கொள்ளும் அந்நிலையே அபிராமி சமயமென்பதும், அஃதே இயற்கைச் சமயமென்பதும், அப்பிரமாணங்களின் வழி புலப்படும் அபிராமி சமயம் இயற்கை அன்னைக்கும் உயிர்களுக்குமுள்ள உறவின் உரிமைகளை உறுதிபெற உணர்த்தும் நெறியினையுடையது.

சிந்திக்கின், நினைத்தலுக்குக் காரணமாயிருக்கும் மனத்தை அடிப்படையாகக் கொண்டு உலகக்காரியங்கள் அனைத்தும் நடைபெறுகின்றன ஆனால் உரிமைப் பேறுடன் வாழும் மக்கள் யாவரும் அம்மனத்திற்கு அடிமையாக வாழவேண்டிய நிபந்தனை நியதியாக அமைந்துள்ளது. மனம் ஒரு மாயையானதால், தாயுமானச் செல்வர் அதனை மாயமனம் என்பர்

இறப்பும் பிறப்பும் பொருந்த — எனக்
கெவ்வண்ணம் வந்ததென்றெண்ணியான் பார்க்கில்
மறப்பு நினைப்புமாய் வந்த — வஞ்ச
மாய மனத் தால் தோழி.

மனம் எங்குள்ளதோ, அங்கும் மாயையுமுண்டு. இம்மாய மக்களைப் பிறவிப் பிணியில் சிக்கித் தவிக்குமாறு செய்யும் வன்மையுடையது.

ஐம்பூதங்களின் இயற்கைக் குணங்களே, இம்மாய மனத்திற்கு அமைந்துள்ளன. நிலத்திற்குரிய திண்மைக்குணமும், அகங்காரமும். அலையெழுப்பும் நீர்க்குரிய நினைவு அலைபாயும் சித்தமும், ஒளிதரும் நெருப்புக்குரிய புத்தி விளக்கமும். ஓரிடத்தில் நில்லாது அலையும் காற்றினைப் போன்று என்றும் எதனையாவது நினைத்துக்கொண்டே அலையும் தன்மையும் மனம் கொண்டுள்ளது மற்றும் இந்நான்கு பூதங்களுக்கும் இடமளித்து அவற்றிற்கு அப்பாலும் அந்தமில்லாது பரந்து நிற்கும் மனப்பான்மையுடைய ஆகாயம் போன்று இது அகங்காரம், சித்தி மனம், புத்தி ஆகிய நான்கிற்கும் இடங்கொடுத்து அப்பால் களங்கமின்றி அசையாது உள்ளீடாய் நிற்கும் 'உள்ளம்' என்ற குணமும் இதற்குமுண்டு. இன்னணம் அந்தக்கரணம் பல குணங்களை வாய்க்கப் பெற்றிருந்தும், அதனில் பெரும்பான்மையாக அலையும் குணம் சார்ந்திருப்பதால், அதனை 'மனம்' என பொதுவான பேச்சு வழக்கில் கொள்ளப்பட்டது. கூர்ந்து சிந்திக்கின், நம்முடலைத் தக்க முறையில் இயக்கும் மனம் ஏனைய உடலுறுப்புகளைப் போன்று தனியாக இல்லை. எனினும் உடலில் உயிர்

கலந்து மறைந்து நிற்பது போன்று மனமும் கண்ணுக்குப் புலனாகா மல் கலந்து நின்று உடலமைப்பில் செழுமையினை ஊட்டி அமைதியு டன் உயிருக்கு ஊதியமாக வீடு பேற்றின்பத்தை வழங்கும் வள்ளற் றன்மையுடையது.

'மன்' என்றால் நினையென்பது பொருள் (மனம்) 'நினைவே போற்றி' என்பர் மாணிக்கவாசகர். வன்றொண்டப்பெருந்தகை 'நினைக்கின்றேன் மனத்துன்னை' என அருளியுள்ளார். நினைவின் அடிப்படையில் செயல்கள் முகிழ்வனவாதலால் மனம் பற்றுவழி செயற் பயனில்லை. ஆதலான் துன்பத் துயர்களுக்கு ஆளாக்கும் மனத்தை இறக்கக்கற்க. முதற்கண் தூயநல்வாழ்வு இன்றியமை யாததென்றும், அதற்கு நினைவும் செயலும் வேறுபடாதவாறு காக் கப்படின். பிறவிப்பிணியிலிருந்து மக்கள் விடுதலை பெறற்கு இறை யருளாற் 'தளர்வு அறியாமனம்' (69) ஒன்றோரி யுறுதல் வேண்டு மென்பது அபிராமபட்டரது தூயவுள்ளம். தளர்வறியா உள்ளத்தை இறைவியின் விளைநிலம் எனப் பட்டர் கருதி. அந்தாதியில் தூயவுள் ளம், அன்பு உள்ளம். தாயுள்ளம் நன்றியுள்ளம் முதலாயவற்றை யும் பலபட விளக்கி. அபிராமி சமயத்துக்கு இன்றியமையாது வேண் டப்படுவது தளர்வறியாமனம் என்பதை அவர் அழுத்தமுற மொழிந் துள்ளார். நினைவின் அடிப்படையில் வெளிவந்த இச்சொற்றொடர் மூலம் அவரது இறையன்பின் தோய்ந்த சிந்தனை அமைதியையும் நினைவு ஆழத்தையும் ஒரோவழி உணரஇயலும், தளர்வு அறியா மனம். பிறவாநெறியினை அளிக்கும் பேறுடையது. இறைவி உயி ரோடு இரண்டறக் கலந்து நிற்பதால், உயிரினின்றும் இறைவியை வேறுபடுத்தாது அதனோடு ஒன்றியிருந்து வழிபடவேண்டுமென்பது பட்டரது சீரிய கருத்து இத்தகைய அத்துவித வழிபாட்டினை வற் புறுத்துவது அபிராமி சமயமெனக் கொள்க 'ஒன்றியிருந்து நினைமின் களுந்தமக் கூனமில்லை' என்பது அப்பரது அருள் வாக்கு

யாண்டும் நிறைமாட்சியுடன் இலங்கும் இயற்கையன்னையின் பராசக்தி என்றும் ஏககாலத்தில் அன்னையாகவும் கன்னியாகவும் மிளிர்கின்றமையால் அப்பராசக்தியினை, முறையுடன் பயன்படுத்து தல் வழிபாட்டின் நோக்கமெனப் பட்டர் கருதினர். தாய்க்கும் சேய்க்குமுள்ள இணக்கமுள்ள இணக்கத்தின் மர்மத்தை உணர்ந்த பட்டர் அதனைக் கடவுள் வழிபாட்டில் கையாண்டு, உலகம் யாவை யும் ஈன்ற இறைவி அவைகளினின்றும் விலகாதும், நிறைகுறை யாதும், உலகனைத்துமாய் என்றும் தன்மயமாய் இருக்கும் பான்மை யினை உணர்ந்தார், உலகம் யாவும் இறைசக்தியின் வன்மை மய மாயிருப்பதால், உலகினைப் பற்றிய உண்மையினை விளக்கும் மகா

மாயையாக இறைவி திகழுங் காலே, இறைவியை அவர் மகமாயி எனக்கொண்டார். இறைவி நிறைபொருளாக இலங்குங்காலே பராசக்தியெனவும், முத்தொழில்களைப்புரியும்போது இறைவி பிராமி வைணவி, உருத்தாரணி எனவும், சக்திமானுகிய சிவசரம் பொருளொடு வயங்குங்காலேயில் துர்க்கையெனவும், காலசொருபணியாகக் கருதப்படுங்காலேயில் காளியெனவும், சகலகலேகளின் வடிவினே எடுக்கும்போது கலேமகள் எனவும், தனதாணியங்களின் பெருக்கின் மூலம் உருவெடுக்கும்போது திருமகள் எனவும், உலகினே அன்போடு ஆதரிக்கும்போது நிலமகள் எனவும் பட்டர் பாராட்டி தம் அபிராமி அந்தாதியில், தெய்வீக சக்தியின் தத்துவத்தையும் இயற்கைத் தாயின் இயல்பையும் பலபட பெரிதும் போற்றி, மன மொழி மெய்களான் மகிழ்ந்தே வணங்குவாராயினர். மற்றும் உடலின் வாயிலாக உயிர் ஒளிரும்படி செய்ய, அப்பராசக்தியின் கூறுபாடுகளாகிய உடல் வலியும் மனத்திட்பமும் ஒருங்கு பெறுதல் இன்றியமையாததென்பதும் பட்டரது உள்ளமாதலால், தெய்வீகத்தோடு கூடித்திகழும் மாண்பை எய்திட தளர்வறியா சீரிய மன ஒழுக்கத்தினே கடைப்பிடித்தல் வேண்டுமெனப் பட்டர் வற்புறுத்துவாராயினர்.

இயற்கைக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பிலே, அபிராமி பட்டர் தாய்க்கும் சேய்க்குமுள்ள அன்பு உள்ளத்து உறவினேக்கண்டு இயற்கை, பெருங்கருணேயுடன் மக்களுக்கு உடந்தையாகச் செயல்படும் பல்வகை உண்மைகளே தன்கறிந்து, அவையாவும் நற்பண்பு வாய்ந்துள்ள நல்வாழ்வுக்கு அடிகோலும் வித்தையை உணர்ந்தார். இயற்கையைக் கொண்டு இறைவியை உணர்ந்த வழி, இயற்கையும் அன்னேயும் ஒத்திருத்தலே தெள்ளிதின் விளங்கவே, மாயிருங் காலத்து எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையில் தெய்வ ஆற்றலுடைய ஓர் சக்தி* திருவருட் பொலிவுடனும், திருவோலக்கக்காட்சியுடனும் இயங்குவதைக்கண்டு களித்தார்; அகவொளி பெற்ருர்; நுகர்வு அறிவு உற்ருர்; இயற்கைப் பொருள்களின் வனப்பில் படிந்த எண்ணம் நாளடைவில் முதிர்ச்சியடையவே, புலன்களும், உண்மையாய இயற்கையழகில் ஒருமைப்பட்டு, அதனில் இறைசக்தியின் உண்மையினேயும், அவ்வுண்மையில் படிந்த அழகினேயும் காணும் பேறு பெற்ருர். இயற்கைக் கண்களுக்கு குளிர்ச்சியையும், செவிகளுக்கு இசை அமுதத்தையும், மனத்திற்கு அமைதியையும், உட

---

* A motion and a spirit that impels
All thinking things, all objects of all thoughts
And rolls through all things' — Wordsworth

லுக்கு இன்பத்தையும் ஒருங்கே அளிப்பதனைப் பட்டர் உணர்ந்து இயற்கையாம் இறைவியை வழிபட்டு, இயற்கைச் சக்தியின் விளையாட்டில் பயன்படாத தொழில் யாதுமின்றென அதன் எழிலிலும் ஈடுபட்டார் † மற்றும் வண்ணமுகம் காட்டும் அச்சக்தியை, பட்டர் அன்னையாகப் பாவித்து, அதன் நியதிக்கே அடங்கி, அதனையே தன் வழிபடும் கடவுளாக இன்பவுணர்வு கொண்டு இயற்கையின் செல்வராக விளங்கினார். இறைபக்திப் பெருக்கில், கடவுளைத் தாயென வழங்குவது இயல்பு. இறையருளில் திளைத்திட்ட தாயுமானவர் 'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எனக்கென்று இரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே' எனக்கூறுவது அறிதற்பாலது. எனவே பட்டர் கொண்டுள்ள, அபிராமியின் சமயம் சக்தி வழிபாட்டினை பக்தியின் அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பது கண்டுகொள்ளப்படும்.

உலகினைப் பற்றிய உண்மையினை விளக்குவது சக்தி வழிபாடு. இது எவ்வுயிர்களுக்கும் அன்னையாக மேன்மையுற்று விளங்கும் பெண்ணுலகுக்கு பெருமையளிப்பது. சக்தி மித்தையன்று. இஃது அழியாது என்றும் நித்தியமாய் இருக்கும் சிவபரம்பொருளைப் பிரியாது சார்ந்திருக்கும் திரு. இத்திரு அறிவுமயமானது; உள்ளத்து ஒளி விளக்கு. இது இகபரமிரண்டினாலும் மக்களுக்கு இன்ப நுகர்ச்சியும் வீடுபேறும் பகுத்தளித்து சிவகதிக்கு வழிகாட்டும் பான்மையது. இதனால் பரம்பொருளின் இயங்கும் தன்மைக்கு சக்தியென்றும், இயங்காத் தன்மைக்கு சிவமென்பதும் உணரப்படும்.

---

† All are but parts of one stupendous whole
Whose body Nature is and God, the soul — Pope

(தொடரும்)

குறிஞ்சித் தலைமகள்
(திணைமாலை நூற்றைம்பது)

இரா. சுந்தரமூர்த்தி எம். ஏ.,
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திணைமாலை நூற்றைம்பது தலைமைசான்ற அகவிலக்கியமாக விளங்குகின்றது. ஆசிரியர் கணிமேதாவியார், குறிஞ்சி முதல் மருதம் வரை பாவளத்துடன் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலும் வெண்பாவாகும். நூற்றைம்பத்துமூன்று வெண்பாக்களும் பொருணயமும் சொன்னயமும் உடையவை. முதல் பிரிவாகத் திகழக்கூடிய குறிஞ்சி வெண்பாக்கள் முப்பத்தொன்றாகும். இவ்வெண்பாக்களின் காட்சிகள் உள்ளத்தைத் தொடுவன, குறிஞ்சியியற்கைச் சூழல் எழிலோவியம் எனலாம். இவ்வியற்கையின் பசுமையைப் போல் மாந்தன் உள்ளம் அமைகிறது. உள்ளம் பசுமையாயின் அறநெறி உலகத்தில் நிலைக்கும். குறிஞ்சி மக்கள் அறநெறியை முதன்மையாய்க் கொண்டவர்கள். குறிஞ்சித் தலைமகள் தலைமகன் உயிரையே தன்னுயிராகக் போற்றக்கூடியவள். இத்தலைமகளின் தோழி தலைமகனுக்கு அறிரையும் அன்புரையும் வழங்குகின்றாள்.

தோழியின் வேண்டுகோள் :

இரவுக் காலத்தில் தலைமகளைக் காண நினைக்கின்ற தலைமகனுக்குத் தோழி கூறுகின்ற அறிவுரையும், 'மலைவழிகளில் வராதே' என்று கூறுகின்ற தோழியின் பொறுப்புணர்வையும் மலைவாழ் விலங்குகளினால் வரக்கூடிய கடுமையினையும் கொடுமையினையும் உரைக்கின்ற தோழியின் உலகியலறிவினையும் இறுதியில் திருமணம் மேற்கொள்வது சாலச் சிறந்தது என்று தோழி தலைமகனிடத்தில் வேண்டுகின்ற விருப்பத்தினையும் பற்றித் திணைமாலை நூற்றைம்பது தெளிவாகத் தெரிவிக்கிறது.

மலைவேங்கை :

" மலைநாட்டுத் தலைமகனே ! இரவுக்காலத்தில் தலைமகளைக் காண்பதற்கு வரநினைத்தால் மலைவழியின் தன்மையை உணர்வாய். மலைகள்தோறும் அருவிகள் உள்ளன. அருவி வெள்ளத்தினால் உனக்கு அல்லல் ஏற்படலாம். எனவே உன் தலைமகள் மனவமைதி

யுடன் இருக்கமாட்டாள்.'' என்று உரைக்கிருள். மேலும் அவள் மலைகளில் விலங்குகள் வாழ்கின்றன என்பதையும் நினைவு படுத்து கிருள். யானைகளை எதிர் நோக்கி மலைவேங்கைகள் அலைந்து திரி கின்றன. நீ அவ்வழியில் வருவாயானுல் வேங்கைகளினுல் துன்பங் கள் வர நேரலாம். பிறகு, உன் தலைமகள் உயிருடன் இருக்க மாட் டாள். உயிரைக் காக்கும் திறமாகிய அறம் முதன்மையாகும்'' என்று வற்புறுத்துகிருள். இக்காட்சியைக் கணிமேதாவியார்

'' கறிவளர் பூஞ்சாரல் கைந்நாகம் பார்த்து
நெறிவளர் நீள்வேங்கை கொட்கும் ''

என்று தோழியின் அறிவுரை யோவியமாக வரைகிருர்.

குரங்கின் வழிபாடு :

அருவி வெள்ளத்தினுலும், வேங்கைகளினுலும் துன்பங்கள் வரும் என்று சொன்னவள், மலையுறை தெய்வங்களினுலும் தொல்லை வரும் என்று குறிப்பிடுகின்ருள். அஃதாவது '' வலிய விரலும் செம்முகமும், வெண் பல்லும், கொண்ட கருவுற்ற மந்தி, தன் அகன்ற கைவிரல்களால் மலைத்தெய்வங்களுக்குச் சுனைநீரைத் தூவி வழிபட்டு வணங்கும். எனவே மலையிலும், மலைப்பக்கங்களிலும் தெய்வங்கள் உலவிக்கொண்டிருக்கும் . இத்தெய்வங்களினுலும் உனக்கு இடர்ப்பாடு வரலாம்'' எனத் தோழி குறிப்பிடுகின்ருள். இவ் வருமையான காட்சியைக் கணிமேதாவியார்,

'' கருவிரல் செம்முக வெண்பற்சூன் மந்தி
பருவிரலாற் பைஞ்சுனைநீர் தூஉய்ப் — பெருவரைமேல்
தேன்தேவர்க் கொக்கு மலைநாட ! வாரலோ
வான்தேவர் கொட்கும் வழி ''

என்று இயற்கைக் காட்சியுற உரைக்கின்ருர்.

மலைக் காட்சிகள் :

தமிழ் நாட்டியற்கைக் காட்சிகளிலும் சில மாற்றங்கள் இலக்கிய ஆசிரியர்கள் காட்டிய தமிழகம், இன்றும் இயற்கைக் காட்சிகளு டன் விளங்குகிறது. சான்ருக, இன்றும் ஒரு மலைபோல எல்லா மலைகளும் எல்லாத்திசைகளிலும் சூழந்துள்ளன. இம்மலைக் காட்சி யைக் கணிமேதாவியார்,

'' ஒருவரை போல் எங்கும் பல்வரையும் சூழ்ந்த
அருவரை உள்ளதாம் '' என்று அழகுறக் கூறுகிருர்.

மேலும் அம்மலைகளில் பெருநாகங்கள் உறைந்து வாழ்கின்றன. புலியிடமிருந்து தப்பிய யானைகள் மலைக்காடுகளில் அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றன். வேங்கை மலர்கள் பாறையில் பரவியிருக்கும் காட்சியானது புலி போலத் தோன்றும். மலையில் முகில்கூட்டம் தவழ்வதனால் மலைநிலம் முழுவதும் பெருவெள்ளம் ஏற்படுகிறது. இவ்வாறெல்லாம் இயற்கைக் காட்சியையும் தமிழகக்குறிஞ்சியையும் பற்றித் திணைமாலை நூற்றைம்பது ஆசிரியர் உரைக்கின்றார். இக் காட்சிகளைந் தோழி தலைமகனிடத்தில் எடுத்து மொழிவனவாக ஆசிரியர் படைத்துக் கூறுகின்றார்.

இவ்வாறு இயற்கைக் காட்சிகளை மொழிந்த தோழி, பெருநாகங்கள், தப்பியோடும் யானைகள், மழை வெள்ளம் ஆகிய இவற்றால் இடர்ப்பாடுகள் நேரலாம் என்று தலைவனிடங் குறிப்பிடுகின்றார்.

இனிக் களவுப் புணர்ச்சி வேண்டாம். கற்பு வாழ்வு வேண்டும் நீ இல்லையென்றால் தலைமகள் உயிருடன் வாழமாட்டாள். உயிரைப் போக்குவாள். எனத் தோழி தலைமகனிடம் தலைமகளின் பேரன்பைப் புலப்படுத்தினாள். இதனைக் கணிமேதாவியார்,

> ''மழைவளரும் சாரல் இரவரின் வாழாள்
> இழைவளரும் சாயல் இனி''

என்று உளம் நைந்துருக உரைக்கின்றார்.

'கெழு'வும் 'கேழு'ம்

ஏ. ஆதித்தன், தமிழாய்வுத்துறை
காமராசர் பல்கலைக் கழகம்.

காப்பியனார் உரிச்சொற்களுக்குப் பொருள் கூறுமிடத்து,

' குருவுங் கெழுவு நிறனாகும்மே ' (தொல். உரியியல்)

என 'குரு' 'கெழு' எனும் இரு உரிச்சொற்களும் நிறத்தைச் சுட்டுவனவாகக் குறிக்கின்றார். ஆனால் இந்நூற்பாவிற்கு உரையெழுதும் உரையாசிரியர்கள் அனைவரும் 'கேழ்' எனும் நிறத்தைக் குறிக்கும் சொல்லையே 'கெழு' என்பதற்குச் சான்றாகத் தருகின்றனர். 1

சங்க இலக்கியத்தில் 'கெழு' என்னும்சொல் ஆட்சிபெற்றுள்ளது; ஆனால் இச்சொல் நிறத்தைச் சுட்டுவதாக அமையவில்லை. இது வினைச்சொல்லாக சங்க இலக்கியத்திலும் பிற்பட்ட பதினெண்கீழ்க் கணக்கிலும் கையாளப்பட்டுள்ளது.2

'கறுப்பு' என்ற உரிச்சொல்லை எடுத்துக்கொண்டால் இது வினைப் பொருண்மையிலும் (சினப்படுதல்) பெயர்ப்பொருண்மையிலும் (நிறம்) கையாளப்பட்டுள்ளமையினைத் தொல்காப்பியரே குறிப்பிடுகின்றார்.3 இதனைப் போன்று 'கெழு' என்னும் உரிச்சொல் இரு பொருண்மையில் கையாளப்பட்டு பின்பு நிறப்பொருள்களில் கையாளப்படும் நிலை சங்ககால இலக்கியங்களில் அழிந்து போயிருக்கலாமல்லவா ? தொல்காப்பியர் 'கெழு' என்பது வினைப் பொருண்மையில் கையாளப்பட்டுள்ளதை கூறாது விட்டிருக்கலாம். வினையாகச் செயல்படும் 'கெழு' மட்டும் சங்க இலக்கியத்தில் நிலை பெற்றிருக்கலாம். இது இவ்வாறிருக்க உரையாசிரியர்கள் 'கேழ்' என்ற சொல்லை 'கெழு' எனும் உரிச்சொற்குச் சான்றாக ஏன் சொல்ல வேண்டும் ?

'கேழ்' என்பதனை 'கெழு என்னும் உரிச்சொல்லின் மாற்று வடிவமாகக் கருதியிருப்பதால் 'கேழ்' என்பதனை 'கெழு'விற்குச் சான்றாக உரையாசிரியர்கள் சுட்டியிருக்கலாம். இவ்வாறு கொள்ளுதற்கும் இடமுள்ளது மாற்று வடிவமாகக் கருதினால் இரண்டாவது வருகை முறையினையும் சுட்டிச் சொல்லுதல் இயலும். இதனது வருகை முறையினைக் கணக்கிட சங்க இலக்கியங்களில் 'கெழு' எனும் நிறப்பொருளை உணர்த்தும் சொல் இல்லாமையால் முடியாமல் போயிற்று.

தொல்காப்பியர் காலத்தில் 'கெழு' என்பதற்கு 'கேழ்' என்றொரு மாற்று வடிவம் இருந்திருக்கலாம். (பொதுவாக எண்ணுப் பெயரடைகளுக்கு இருவடிவங்கள் இருப்பதைப் போல; ஒரு—ஓர், இரு—ஈர்) தொல்காப்பியர் 'கெழு' என்பதனையே அடிப்படை வடிவமாக (basic form) எடுத்தாண்டிருக்கலாம். உரையாசிரியர்கள் காலத்தில் நிலத்தைக் குறிக்கும் 'கெழு' எனும் வடிவம் அழிந்து போயிருக்கலாம். எனவே உரையாசிரியர்கள் தம் காலத்தில் நிலைத்திருந்த 'செழு'வின் மாற்று வடிவமாகிய 'கேழ்' என்பதனைக் 'கெழு' என்பதற்குச் சான்றாகத் தந்திருக்கலாம்.

மேற்கூறிய விளக்கமுறையிலிருந்து இரு முடிபுகளுக்கு வரலாம்

1. தொல்காப்பியர் வினைப்பொருண்மையினைச் சுட்டாது நிறத்தைச் சுட்டும் 'கெழு'வினை மட்டுமே குறித்திருக்கலாம். இந்த

'கெழு' சங்ககாலத்தில் வழக்கிறந்திருக்கலாம்.

2. தொல்காப்பியர் காலத்தில் நிறத்தைக் குறிக்கும் 'கெழு' என்பதன் மாற்று வடிவாக 'கேழ்' இருந்திருக்கலாம். 'கெழு' என்னும் வடிவம் உரையாசிரியர்கள் காலத்தில் அழிந்து பட்டிருக்கலாம்

அடிக்குறிப்புகள் :

1 இளம்பூரணர், தொல்காப்பியம் — சொல்லதிகாரம், நூற்பா : 301

சேனாவரையர், தொல்காப்பியம் — சொல்லதிகாரம் நூற்பா : 301

நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் — சொல்லதிகாரம் நூற்பா : 303

தெய்வச்சிலையார், தொல்காப்பியம் — சொல்லதிகாரம் நூற்பா ; 298

2 குறுந்தொகை, 31 : 6; நற்றிணை, நற்றிணை, 38 : 4; நாலடியார். 90 : 1; பழமொழி, 228 : 3

3 தொல்காப்பியம் — சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, நூற்பா, 372, 373.

இக்கட்டுரை எழுத பல்லாற்றானும் உதவிபுரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர் மோ. இசரயேல் அவர்களுக்கு நன்றி உரித்தாகுக.

இந்தி கட்டாயமில்லை?

வீ. பொ. பழனிவேலனார்

1937-இல் திரு. இராசகோபாலாச்சாரியார் தமிழ்நாட்டில் இந்தி புக வழி செய்தார். அன்று முதல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியும் இருந்து வருகிறது.

திரு சவகர்லால் நேரு அவர்கள் இந்தி பற்றி ஓர் உறுதிமொழி தந்தார். அஃதாவது இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை யார் மீதும் இந்தி திணிக்கப்படமாட்டாது என்பதாம்.

ஆனால் மறைமுகமாக இந்தி தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. ஊர் தோறும் இந்தி பரப்பு நிலையங்கள் உள்ளன.

இந்திய தேசிய பேராயம் தமிழ்நாட்டை ஆளத் தொடங்கியது முதல் இந்தியைத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் பாடமாக வைத்தது கட்டாயமாக்கியதை எதிர்த்த பிறகு விருப்பப் பாடமாக்கியது. பள்ளிகளில் இந்தி ஆசிரியர் அமர்த்தப்பட்டனர். விரும்பியவர் இந்தி கற்றனர். அன்றைய தமிழக அரசு மும்மொழிக் கொள்கையை ஏற்றது.

தி.மு.க. தமிழகத்தை ஆட்சி புரியும் பொறுப்பை ஏற்றதும் அன்று முதல்வராயிருந்த பேரறிஞர் அண்ணாத்துரை (அண்ணா) அவர்கள் இருமொழிக் கொள்கையை வலியுறுத்திப் பள்ளிகளில் இந்தி கற்பிப்பதைத் தடைசெய்து இந்தி ஆசிரியர்கட்கு வேறு பணிகள் அளிக்கச் செய்தனர்.

அண்ணாவுக்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்புக்கு வந்த திரு. மு. கருணாநிதியும் அண்ணாவழியைப் பின்பற்றி இருமொழிக் கொள்கையையே கடைபிடித்தார்.

இன்று தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பில் உள்ள அண்ணா தி.மு.க. அரசும் அண்ணாவழியையே பின் பற்றி வருகிறது. இந்தி தமிழ் நாட்டில் புகுத்தப்படுவதை வன்மையாக எதிர்த்து வருகிறது.

"எக்காலத்தும் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தையும் தமிழக ஆட்சிமொழியாகத் தமிழையுமே ஏற்போம்! இந்தியை ஏற்க மாட்டோம்" என்று முதலமைச்சர் ம கோ. இராமச்சந்திரன் செல்லுமிடமெல்லாம் சொல்லி வருகின்றார். அவர் கட்சியும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தி வருகின்றது.

இருப்பினும் நடுவரசு இந்தியை வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதைப் போல் புகுத்திக்கொண்டுதான் இருகிறது. 1950 சனவரி முதல் பல இந்திச் சொற்கள் தமிழில் கலந்து வருகின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

லோக்சபா, ராஜ்யசபா, ராஜ்பவன், ராஷ்ட்ரபதி, ராஷ்ட்ர பதி பவன், பாரதப் பிரதமர், விதன்சபா, சபாநாயகர், பிராந்தியம் ஆகாஷ்வாணி, தூர்தர்சன், ஜன்சங், ஜனதா, கிசான்சபா, கிரந்திதல், பாரதீய லோக்தல். ராஷ்ட்ரீய சுயம்சேவாசங். பிரேமி மண்

டல், வியாய மண்டல். பிரசார சபா, தட்சண பாரத், பந்த், கெரோ. தர்ணு, சஞ்சாய்க்கா, சர்பான்ச், ஜனான்பித், சுவேகா, கீதாஞ்சலி. சர்வோதயம், பூதான். கிராம்ராஜ், ராம் ராஜ், கிதாப் கபாடி, பஜார், பஞ்சசீல், காயத்ரி, கோஹத்தி. கிராம் சேவக், ஜவான், சர்க்கா ராட்டை, சுகாதார், ஜம்போரி, மாசாம், பரிஷத் கவாத். ராஜ்நிவாஸ் முதலியன

மேற்கண்ட இந்திச் சொற்களேயும் பிற சொற்களேயும் தமிழ் நாட்டில் மக்களிடையே பரப்பிவரும் கருவிகள் :

(1) வானெலி. வானெலி நிலேயங்கள் (2) தமிழ், ஆங்கில செய்திதாள்கள் (3) மேடைப்பேச்சாளர்கள் (4) இருப்புப்பாதைத் துறை (5) அஞ்சல்துறை (6) தட்சண பாரத இந்திப்பிரச்சார சபைகள் (7) இந்தி பிரேமி மண்டல்கள் முதலியன.

ஆங்கில நாளிதழ்களாகிய மெயில், இந்து, எக்சுபிரஸ், ஆகியன ஆங்கிலச் சொற்கள் போடவேண்டிய இடத்தில் வேண்டுமென்றே இந்திச்சொற்களேப் போடுகின்றன. இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்துவதில் அவ் ஏடுகள் மிகுந்த அக்கரையுடன் செயலாற்றுகின்றன.

தமிழ்நாட்டில் பண்டுதொட்டுக் குடியேறி வாழும் வேற்று மொழிகள் பேசுவோர் தம்தம் மொழிகளே வளர்க்கவே பாடுபடுகின்றனர். ஆனல் சிலர் அரசு தொடர்பாக எழுதும் விண்ணப்பப் படிவங்களில் தம தாய்மொழி தமிழ் என்றே குறிக்கின்றனர். அவர்கள் வளர்க்க விரும்புவதோ அவர்தம் முன்னேர் மொழியையே.

தமிழ்நாட்டில் வாழும் வேற்று மொழியினர் தம்மொழியைப் பயிலத் தம்மொழிப்பள்ளிகள் அமைக்கவேண்டுமென்று தமிழக அரசை வேண்டுகின்றனர். ஆனல் தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பெறவில்லே

தமிழ்நாட்டில் பல நாட்டினரும், பல மொழியினரும். பல கட்சியினரும் இருக்கிருர்கள். அவர்களுள் தி. மு. க; அ. தி. மு. க. தி. க; உ. த. க; தமிழியக்கம், தமிழர் பேரவை, தனித்தமிழ்க்கழகம், தமிழ்ப் பாதுகாப்புக்கழகம் முதலியன இந்தியை ஏற்காதவை. ஏனைய கட்சிகள் யாவும் மும்மொழிக் கொள்கையை வரவேற்பவை: இந்தியை ஏற்பவை, விரும்புபவை,

தமிழ்நாட்டில் வாழும் வேற்று நாட்டினரும், வேற்று மொழியினரும், மேற்கண்ட கட்சியினரல்லாதாரும் இந்தியை விருப்புடன்

படிப்பவர்; பரப்புபவர். தமிழரில் வீடண, சுக்ரீவ, அநுமார் வழியினர் சிலரும் பிழைப்புக்காக இந்தியைக் கற்றனர்.

தமிழ்நாட்டைத் தி. மு. க. வோ அண்ணா தி மு. க. வோ ஆளாமல் மாற்றுக்கட்சியினர் ஆளும் நிலையேற்பட்டால் தில்லி நடுவணரசின் மும்மொழிக் கொள்கையை ஏற்று இந்திமொழியைத் தமிழகப் பள்ளிகளில் பாடமாக வைப்பர். இந்தி ஆசிரியர் அமர்த்தப்படுவர்.

ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் இந்தி படித்தவர் தொகை மிகுந்துவிடும். உடனே மத்திய அரசு ஆங்கிலத்தை அகற்றிவிடும் அந்த இடத்தில் இந்தியை அமர்த்திவிடும். இந்தி மத்திய அரசு தொடர்பு மொழியாகவும் இந்தியப் பொதுமொழியாகவும் ஆக்கப்பட்டுவிடும்.

அப்பொழுது இந்தியை விருப்புபவர் தொகை மிகுதியாகிவிடும் இந்தியை விருப்பாதவர் தொகை சிறுபான்மையாகிவிடும். பெரும்பான்மையர் குரல் எடுபடும். சிறுபான்மையர் குரல் எடுபடாது. பெரும்பான்மையோர் வெற்றி பெறுவர். சிறுபான்மையோர் தோல்வியுறுவர். இந்தி தமிழ்நாட்டில் நிலையான இடம் பெற்றுவிடும்.

" இந்தியை மக்கள் விரும்பும் வரை யார் மீதும் திணிக்கமாட்டோம் " என்பதன் கருப்பொருள் யாது? " என்றைக்காவது மக்கள் விரும்பித்தான் ஆகவேண்டும். இந்தியைப் புகுத்தியே தீருவோம். " என்பதாம். ஏனெனில், இந்திய அரசியல் சட்டத்தில் இந்தி இந்தியாவின் பொதுமொழியாக்கப்படவேண்டும்; ஆங்கிலம் அயலார் மொழியாகையால் இந்தியமொழியொன்றே பொதுமொழியாகவும் தொடர்பு மொழியாகவும் இருத்தல் வேண்டும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆயின் இந்தய மொழிகளுள் இந்தி மொழியே பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி; எனவே, அதுதான் தக்கமொழி, திரு காந்தியாரும் அதனையே இந்தியப் பொதுமொழியாக்கப்படவேண்டுமென்று விரும்பினர். ஆகவே இந்தியை எல்லா நாட்டுப்பற்றுள்ளவரும் ஏற்கவேண்டும். " நாட்டுப் பற்றில்லாதவரே இந்தியை எதிர்ப்பவர் " என்று திரு மொரார்சி தேசாயும் அண்மையில் கூறியுள்ளார். இன்றில்லையேனும், என்ருவது இந்தி தமிழ்நாட்டில் நிலைத்துவிடும் என்பது உறுதி.

தமிழ் நலம், தமிழர் நலம், தமிழ்நாட்டு நலம் விருப்பும் அனைவரும் வடநாட்டாரின் உறுதிமொழி. ஆசைமொழிகளை நம்பி ஏமாந்துவிடாதீர். பின்னர் வருந்திப் பயனில்லை, வருமுன் காப்பதே அறி

வுடைமை. தும்பை விட்டு வாலைப்பிடிக்கும் கதையாகிவிடும். சமற்கிருதத்தால தமிழும் தமிழ்ப் பண்பாடும் கெட்டாற்போல் இந்தியால் கேடுறும்.

எனவே, தமிழும், தமிழரும். தமிழ் நாகரீகமும் பண்பாடும் என்றும் நின்று நிலவ வேண்டுமாயின் தமிழர் யாவரும் சமய, சாதி கட்சி வேறுபாடு கருதாமல் இந்தியை எதிர்த்தேயாக வேண்டும். இல்லாவிடின் தமிழ் மாநிலத் தன்னுட்சியுரிமை கோர வேண்டும். இல்லையேல் என்ருவது ஒருநாள் இந்தி தமிழ்நாட்டில் புகுந்தே தீரும். தமிழரும் தமிழும் பல கேடுகட்குள்ளாகி இறுதியில் அழிவை நோக்கிச் செல்ல நேரும் என எச்சரிக்கிறேம்.

தொல்காப்பியமும் சார்பெழுத்துக்களும்

(ச. பாலசுந்தரம், துணை முதல்வர். க. பு. க)

துணர் 52 மலர் 12 பக்கம் 230-ன் தொடர்ச்சி,

குற்றிறலிகரம் புணர்மொழியுள்ளும் வரும் என்று கூறுவதே ஆசிரியர் கருத்தாயின். குறுகலும் என வேண்டா கூறியிரார். மேலும் உணரக்கூறின் என்பது வெற்றெனத்தொடுத்தலாய் முடியும் சுருங்கிய வாய்பாட்டால்

" புணர்மொழியிடத்தும் பொருந்தித் தோன்றும் "

என்ருற் போலக் கூறியிருப்பார். மற்று நிலை மொழியீற்றுக்குற்றியலுகரத்தின் திரிபாகவன்றிக் குற்றியலிகரத்தை ஈருக உடைய சொல் என்றும் இன்மையின் குற்றியலிகரப் புணர்ச்சி என்பதொன்றில்லை என்பதையும் அவர் கருதிலர்.

" இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே
கடப்பா டறிந்த புணரியலான "

எனக்குற்றுகரத்திற்குக் கூறியாங்குக் கூருமல் ஆசிரியர்

" புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே "

எனக்கூறியிருப்பதனையும் ஓராராய் இவ்வாறு ஒவ்வாவுரை பகர்ந்துள்ளனர். இது பற்றிய தெளிவை அடுத்துவரும் நூற்பாவிற் காண்போம். அடுத்து

"யகரம் வரும் வழி இகரங் குறுகப்
உகரக்கிளவி துவரத் தோன்றாது"

இதன் பொருள்:. குற்றியலுகர நிலைமொழி நோக்கியகரம் வருமொழி முதலாக வருமிடத்து நிலைமொழிக் குற்றியலுகரம் குற்றியலிகரமாய்த் திரிந்து பின்னர் அது தன் அரை மாத்திரையளவினும் (ஒரோ வழி) குறுகும். (முன்பிருந்த) குற்றியலுகர ஒலி முற்றத் தோன்றாது மறைந்துபடும். எடுத்துக்காட்டு முன்னைய நூற்பாவிற் காட்டப்பெற்றன.

இந்நூற்பா குற்றியலுகரப் புணரியலுள் ஐந்தாவதாகிக் குற்றியலுகரம் நாற்கணத்தோடும் புணருங்கால் எய்தும் இயல்பு பற்றிய விதி கூறுமிடத்துள்ளது "யகரம் வருவழி" என்றதனானும் "உகரக்கிளவி துவரத் தோன்றாது" என்றதனானும் நிலைமொழியீறு குற்றியலுகரமே என்பதும் இகரமாதல் அக்குற்றியலிகரமே என்பதும் தெளிவாம். குற்றியலுகரமே இகரமாய் (வருமொழி நோக்கில்) திரிந்தமையின் இவ்விகரமும் அரை மாத்திரையளவினதே என்பதுதானே விளங்கும். எனினும் இக் குற்றியலிகரம் ஒரோவிடத்துத் தன் அரைமாத்திரையினும் குறைந்தொலிப்பதனை எஃகு செவியான் உணர்ந்து "புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே" எனமொழிமரபினுள் தோற்றுவாய் செய்ததற்கேற்ப ஈண்டுக் குறுகும் என்றார். ஆண்டுக் குறுகலும் உரித்தே என எதிர்மறை உம்மை கொடுத்து இந்நிலையும் கூறியதனான் ஈண்டுவாளா குறுகும் என்ற அளவில் இசைத்தார் என்க.

குற்றியலுகர ஈறு மெய்யீறு போல வருமொழி உயிர் ஏற இடந்தந்து தானும் கெடாதே நிற்றல் அதன் இயல்பாகலின் ஓர் இகரம் ஆண்டு தோன்றிவரும் எனக்கருதுவார்க்கு ஈண்டும் அவ்வாறே குற்றுகரம் கெடாது நிற்குமோ என ஐயந்தோன்றும். அவ் ஐயத்தை நீக்குவான் வேண்டிக்கெடும் என்னாது துவரக் கெடும் என்று தெளிவு படுத்தினார் என்க.

ஆகக் குற்றியலிகரம் விதியீறாக வந்து புணரியல் நிலையிடை நிற்றலன்றி இயல்பீறாக வாராதென்பதும் யாண்டுவரினும் யகரத்தின் முன்னர்த்தான் வருமென்பதும் புணர்மொழிக்கண் நிற்குமிடத்து ஒரோவழித்தன் அரை மாத்திரையளவிற் குறுகி ஒலிக்குமென்பதும் போதரும்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆண்டோர் இகரம் தோன்றி வந்து அரைமாத்திரையளவிற் குறுகும் என உரைகண்டனர்.

தோன்றிவரும் என்பதற்கு யாதோரியையும் அவர் கூறிற்றிலர். சிவ ஞானமுனிவர் குறுகும் என்பற்கு வரும் எனப்பொருள் கூறினர், வருமொழி முதல் யகரமேயன்றி இக்குற்றியலிகரமன்று. ஆதலின் அவர் கூற்றும் பொருந்துமாறில்லை இரெட்டியாரவர்கள் நிலைமொழி யீறு முற்றுகரம் என்றும் அதனுன் வரும் இகரம் ஏறிமுடியும் வாய்ப் பின்மையான் துவரக்கெடும் என ஆசிரியர் விதித்தார் என விளக்கி ஞர். அவர் அதிகாரம் குற்றியலுகரப் புணரியல் என்பதை மறந்த தோடல்லாமல் தோன்றிவந்த இகரந்தையும் (ஒரு மாத்திரை) உயி ரினத்து இகரமாகக் கருதி விபரீதப் பொருள் கண்டுள்ளார்.

குற்றியலிகரம் சார்பெழுத்தாகலின் பிற உயிர்போலக் குற்று கரத்தின்கள் ஏருதென்பதை உணர்தல் வேண்டும். இந்நூற்பா சூத்திரத்திற்குரிய இலக்கணமாகிய நுண்மையோடு புணர்ந்த ஒண்மைத்தாய் விளங்குதலை நன்கறியலாம்.

அடுத்து

''ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்'' என்னும் நூற்பா.

இதன் பொருள் :— குற்றியலிக்ரம் முதலெழுத்துக்களுள் ஒரு பிரி வான ஒற்றெழுத்திற்குரிய இயல்பினதாகும்.

இந்நூற்பா செய்யுளியலுள் அசையிலக்கணம் கூறுமிடத்துள் ளது. இஃது ஒரு சீரின்கண் அசைக்கு உறுப்பாக வருங்கால் ஒற் றெழுத்துப் மோல அலகுபெருமல் நிற்குமென்பது கருத்து. அஃதா வது புள்ளிபெறின் அலகு பெருமைதாமே போதருதலின் இந்நூற் பா குற்றியலிகரம் புள்ளிபெறுதலையே முதன்மையாகக் கருதிக் கூறப்பெற்றதென்க. அன்றி இதனை உயிரின் குறுக்கமாகக் கருது வாரைப் போல எண்ணி அலகுபெருதென்பதை மட்டும் ஆசிரியர் கூறக்கருதியிருப்பின்

'' உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மையான (கசய் 43)

என்னும் நூற்பாவை அடுத்து இதனைக் கூறியிருப்பார். அசை பற் றிய இலக்கணம் அதிகரித்து வருமிடத்துக் கூறியிரார். மேலும் மெய்யெழுத்தியற்றே என்னுது ஒன்றெழுத்தியற்றே என்ற நுண்மை யையும் ஓர்தல்வேண்டும். அலகு பெருதென்பதனை 'உயிரில் எழுத் தும்'' என்ற உம்மையால் சார்பெழுத்துகள் மூன்றற்கும் பொது வாக ஓதிக்கொள்ள வைத்தமையானும் தெளியலாம்.

இஃதொன்றனையும் ஓராத நச்சினார்க்கினியர் ஒற்றியற்று எழுத்தியற்று என வலிந்து பொருள் கூறினர். குற்றியலிகரம் யாண்டும் அலகு பெறுதென்பதனைப் பேராசிரியர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளமையை அவர் உரையிற் காண்க. அலகுபெறின் அஃது உயிரினத்து இகரம் என்று தெளிக. இந்நுண்மையுணராத காரிகையாசிரியர் ''சீருந்தலையும் சிதையாவிடத்து அலகுபெறும் எனக்கூறினர் அவரைப் பின்பற்றி நச்சரும் அவ்வாறே கருதி இந்நூற்பாவிற்குப் பொருள் உரைத்தார் போலும்.

இனி இக்குற்றியலிக்ரம் பற்றித் தொல்காப்பியத்திற்குப் பின் பிறந்த இலக்கண நூல்கள் கூறுவன வருமாறு.

இகரங்கூறுகி வரும் குற்றுகரம்பின் யவ்வரினே (வீர-3)

யப்பின் அடையவருமிகரம்......... குன்றும் (நேமி-4)

யகரம்வரக் குறளுத் திரியிகரமும்
அசைச்சொன்மியாவின் இகரமும் குறிய (நன்-93)

யகரம் வரக்குற ளுத்தப வரூஉம்
இகரமும் மியாவின் இகரமும் குறிய (இலக்கண விளக்கம்-15)

யம் முதலிய்யாம் இறு குறள் உக்கெடில்
அஃகும் அற்றும் அசைச் சொன்மியாவே (தொன்னூல் விளக்கம்-14)

யகரம் வரும் வழி இகரங் குறுகும் (முத்துவீரியம்-34)

அசைச் சொன்மியாவின் இகரமுமற்றே (,, 35)

இவ்விலக்கண நூல்கள் யாவும் சார்பெழுத்தென்பதன் கருத்தினையும் உண்மையியல்பினையும் உணர்ந்தனவல்ல என்பதை இவை ஒன்றுக்கொன்று மாறுபடக்கூறும் சார்பெழுத்துக்களின வகை-எண்ணிக்கைகளாலும் உணரலாம். இவற்றுள் முததுவீரியம் குற்றியலிகரத்தைச் சார்பெழுத்தாகவே கொள்ளவில்லை. இஃதோர் வியப்பாம். இனிக்குற்றியலுகரம் பற்றிக் காண்போம்.

(தொடரும்)

பாரதிதாசனின் நாடகங்கள் — ஓராய்வு

பேராசிரியர் கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். பில்.

00 : 00 'நாடகத்தமிழ் நலிந்தது' எனுங் குறையைப் போக்க இருபதாம் நூற்றுண்டில் எழுந்த நாடகங்கள் பலப்பல. அவற்றுள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'கற்கண்டு' 'பொறுமை கடலினும் பெரிது', இன்பக்கடல்', சத்திமுத்தப்புலவர்' எனும் நாடகங்களின் படைப்புத்திறனை இவண் நோக்குவோம்.

00 : 01 கற்கண்டு பொறுமை கடலினும் பெரிது ஆகிய இரு நாடகங்களும் நகைச் சுவை நாடகங்கள். 'இன்பக்கடல், ஒரு 'காது நுகர் நாடகம்'. முழுமையானகவிதை நாடகமே சத்திமுத்தப் புலவர்

00 : 02 இந்நான்கு நாடககங்களும் கவிஞரின் 'நாடகப்படைப் பில், மூன்றுதிற முனைப்புகளைக்காட்டியுள்ளன. முதலிரண்டும் நகைச்சுவையும், மூன்ருவது எளிய நாடக முயற்சி ஒன்றினையும், நான்காவது கவிஞரின் புதுமுறைக்கவிதை உரையாடலோடு கூடிய நாடகப் படைப்பினையும் புலப்படுத்துகின்றன.

00 : 03 முதல் மூன்று நாடகங்களும் இன்றைய சமுதாய வாழ்வியலோடு தொடர்புடையனவாக விளங்குகின்றன. '' சத்தி முத்தப்புலவர் '' என்னும் நாடகம் முழுமையான இலக்கிய விளக்கக்காட்சி நாடகமாக இலங்குகின்றது.

01 : 00 'கற்கண்டு' நாடகத்தில் பதினெரு காட்சிகளையும் 'இன்பக்கடல்' நாடகத்தில் பதினெரு காட்சிகளையும் '' சத்தி முத் தப்புலவர் '' நாடகத்தில் ஐந்து காட்சிகளையும் காணமுடிகின்றது, 'பொறுமை கடலினும் பெரிது' நாடகம் காட்சிப்பிரிவற்றுக் காணப் படுகிறது.

01 : 01 'பொறுமை கடலினும் பெரிது' — நாடகம் காட்சி வேறுபாடுகளை உடையதா யிருந்தும், வெவ்வேறு காட்சிகளாக வகுககப் பெறவில்லை. முதற்காட்சியிலேயே ''எஜமான் வீட்டில் நடப்பது'' எனவும், நடுவே ''கணக்கன் வீட்டில் நடப்பது'' என்ப தாகவும், பின் ''மீண்டும் எஜமான் வீட்டில் நடப்பது'' என்பதா யும் கூறப்பட்ட திருப்புக் காட்சிகளை தன்னுள் அடக்கியதாகவே இக்காட்சி நடந்துமுடிய, அதனைத் தொடர்ந்து 'மறுநாள்' என்ற

குறிப்போடு கவிஞர் இந்நாடகத்தைத் தொடர்ந்துள்ளார். ஆதலின் முதற்காட்சிகளின கூறுகளை மூன்றாகவும், மறுநாள் என்பது முதலாத்துவங்கும் நாடகப் பிற்பகுதியினை நான்காம் காட்சி எனவும் நாம் எடுத்துக்கொள்ள, இந்நாடகம் நான்கு காட்சிகளை உடையதாகத் திகழ்கின்றது.

01 : 02 'சத்தி முத்தப்புலவரில்' ஐந்து காட்சிகளை வகுத்த புலவர், ஐந்தாவது காட்சியினை காட்சி வேறுபாடுடையதாகப் படைத்திருந்தும் வேறுபடுத்திப் படைத்தாரில்லை. ' பாண்டியனின் அவைக்காட்சியாகத் தொடங்கும் இவ்வைந்தாம்காட்சி, ''புலவரின் வீட்டில் நிகழும் காட்சியினை இடையிற் கூறி, இடையில் 'அரசவைக் காட்சியினையும்' இறுதியில் 'புலவரின் வீட்டுக் காட்சியினையும் காட்டுகிறது. ஆதலின இவ்வைந்தாம் காட்சி தம்முள்ளேயே தொடர்ந்த ஆறு, ஏழு, எட்டு ஆகிய மூன்று காட்சிகளை உடையதாயிருந்தும் நாடக முடிவினைத் தொடர்ந்தே பெற்றிருப்பினும், அக்காட்சி மாற்றங்களை வகுத்துணர்த்தாதே வாளா எழுதியிருக்கின்றார் கவிஞர்.

01 : 02 : 1 மேலும் ''அரண்மனையில் ''. ''அந்தப்புரத்தில்'' எனத்தொடரும் திருப்புக்காட்சிகளையும், கவிஞர் ஒரு காட்சியிலேயே பி வற்ற நிலையில் மயங்க அமைத்துச் சென்றிருக்கிறார்.

02 : 00 இவ்வாறு நாடகக் காட்சிகளை வகுப்பதில் நிறைகாட்டாப் பாரதிதாசன், நாடகப்படைப்பிலும், இந்நான்கு நாடகங்களைப் பொறுத்தவரை முனைப்பின் முதற்படியிலேயே நின்றுள்ளமை அறியத்தக்கது.

02 : 01 'இது ஒரு காதுதிசர் நாடகம்' எனப்படைக்கப்பட்ட 'இன்பக்கடலின்' கதை ஓட்டம் இடையறவு பட்டதாகவே விளங்குகின்றது. இறுதிக்காட்சியோ மிகச்சுருக்கமாகப் 'பட்டுவின் ' திருமணத்தை ஏதோ கட்டுரைச் செய்திபோல

'' பட்டு ! மணம் முடிந்ததா உனக்கு ? ''

'' ஆம். தங்கம் ''.

'' இரு மணமக்களும் வாழ்க !

என்பதாகப் படைக்கப்பட்டுள்ளமை நாடகஉரையாடலமைப்புமன்று நாடக இறுதிக்காட்சிக்கு ஏற்புடையதுமன்று.

03 : 00 கற்கண்டு — பாண்டிச்சேரியில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரையில், தெருவில் கதைசொல்லும் ஒருவனின் கதையாகும்

03 : 01 'சிறுத்தொண்டப் பத்தனின்' கதைகூறும் தருமனின் கதைசொல்லும் பாங்கும், திருமணம் குறித்த அவனது எத்தல்களும் தலைப்புக்கேற்றாற்போலச் சுவைபயபனவாம்! பாரதிதாசனின் புதுவை வாழ்க்கையின் தோய்வினை வெளிப்படுத்துவனவாம்!

03 : 02 தான் கொடுத்த முந்நூறு ரூபாய் கடனுக்காக், கற்கண்டு எனும் குமரியை மணக்க அவள் தந்தை துரைசாமி முதலியாரோடு பாண்டிச்சேரியில் தனிவீடெடுக்கும் வீரப்ப முதலியாரும் அவரது திருமண ஆசையும், புரட்சி எண்ணம் படைத்த சீனு. இராமசாமி எனும் இளைஞர்கள் இக்கிழ மணத்தைத் தடுக்க முயல்வதும், தழிமனின் திருமண எத்தலும், வீரப்ப முதலியாரை அவன் ஏமாற்றுவதும், கற்கண்டை இறுதியில் தருமனே மணம் புரியவுள்ளதும் சிறப்பான கதைதொடர்வுகளே. ஆயின் கவிஞர் இடையில் சில நிகழ்ச்சிகளை நிறைவு செய்யாமலேயே செல்கிறார். சீனு. இராமசாமி இவர்களின் இடையீடும் அதிலொன்றாகும்.

03 : 03 வழக்குச் சொற்களைப் பயன்படுத்தும் முறை கற்கண்டில் இனித்தாலும், நாடகக் குறிப்பிற்கேலாது, கட்டுரையை முடிப்பது போன்றே உரையாடல்களையும் கவிஞர் முடிக்கின்றார்.

எடுத்துக்காட்டாக :

" உடனே தருமன் ஜனங்களைப்பார்த்து

உருக்கமாக

" சிவனடியார் போலே அவர் உருவெடுத்தார் "

என்று அடியை முடிக்கிறான் (கற்கண்டு-பக்கம் : 9)
என்று எழுதியுள்ளமை நாடக உரையாடற்கு எந்நிலையிலும் பொருந்துவதன்று.

அடைப்புக்குறிகளுள் குறிப்பிடப்படவேண்டிய நிகழச்சிகளும் பாரதிதாசனால் உரையாடலின் தொடர்பாகவே படைக்கப்பட்டுள்

என எனக் கூறுவதைக் காட்டிலும், தவறுதலாக அச்சிடப்பட்டது எனக் கூறுவதே பொருத்தமுடையதாகிறது,

03 : 05 இடங்களுக்கேற்பவும். நிகழ்ச்சிகளுக்கேற்பவும், சிறுத் தொண்டக் கதைப்பாடலை, பாடலின் தொடர்புகளைக் கூறுவதாகக் காட்டி நகையினை உருவாக்குகின்றார் கவிஞர். வேலையிழந்த காவற் காரன்; முதலியாரிடம்;

" நான் ஒரு குற்றமும் செய்யலிங்களே. சோத்துக்கு வழியில லாமே ஆக்கிபுட்டிங்களே " என வினவும்போது கதை சொல்லும் தருமன், " சோறுதின்னவேண்டுமென்றே தொழுது நின்றான " எனும் " சிறுத்தொண்டப் பத்தக் கதைத் " தொடரை வலித்துக் கூறுகின்றான். அடுத்து வேலைக்காரன் முதலியாரிடம்

" நான் எப்படி பொழைக்கிறதுங்க ?" என வினவும்போதும் தருமனின் வாயிலாக " சோறுதின்ன வேணுமென்றே தொழுது நின்றான்!" எனுந்தொடரைக்காட்டி நகைக்க வைக்கிறார் கவிஞர்.

03 ; 05 கதையோடு கருத்தாக கவிஞர் 'கிழக்காதலை' வெறுக் கும் வகையில்

" ரொம்ப சந்தோஷமாச்சே தாத்தா !

ஒங்கள கட்டிகினு அழறதிலியும் பிச்சை எடுக்கிறது தேவிலியே வயசு மாப்பிளே கூட" என்பதாக மணமகள் கற்கண்டு வாயிலாகக் கூறியுள்ளமை போற்றத்தக்க நாடகக் குறிக்கோளே.

03 : 06 இறுதியில்,

" பெரியவர் பொய் சிறியவர் பொய்

மனுசர்களெ — ஓ

மனுசர்களே

பிழைப்பது மெய் என்றன் கற்கண்டே !"

எனக்கூறும் கவிஞர், தருமனின் வாயிலாகவே

" இந்தக்கதை அருமை
தெரியாத மனிதர் — ஆமாம்
தெரியாத மனிதர்
எருமைமாடாப் பிறந்து திரிவாங்க"

எனக் கூறி 'பரமபாகவதர்' போன்றே கதையினை முடிக்கின்றார், — புதுக்கவிதைத் தோற்றத்தில் நகையோடு; குத்தலோடு.

04 : 00 "பொறுமை கடலினும் பெரிது" சுயநலப்புலியான முத்துப்பாக்கம் பெரிய எஜமான், தனது பணியாட்களின் கொடிய துன்பங்களைக்கண்டும் அவர்கட்குதவாது, 'பொறுமை கடலினும் பெரிது' எனக்கூறி. இறுதியிலும் இரங்காமல் இருக்கின்றார். ஆனால் தன்க்குச் சிறு துன்பம் வந்தபோது அனைவரது உதவியினை யும் அடுத்தடுத்து உடன் வேண்டிய நிலையில் பழிவாங்கப்படுகின்றார் "கருணை காட்டுங்கள் உங்கட்கு கருணை காட்டப்படும்" எனும் முதுமொழியினை இந்நாடகம் விளக்குகிறது. எஜமான் தனது வேலைக்காரர்களிடம் உதவி வேண்டுங்கால் 'அளந்த படியாலே திருப்பி அளக்கப்படும்' எனும் கூற்றிற்கேற்ப அவரவர்களும் பொறுமையைக்காட்டி உதவாமலிருக்கவே, எஜமான் தாமே மேற் கொள்ளும் பயண முயற்சியும் - தோல்வியும் நம்மை நகைக்க வைக் கின்றன

04 : 01 இந்த நாடகத்தில் கவிஞர் உலக வழக்கினடிப்படை யில் பல குறிப்புத் தொடர்களைப் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளார்.

கணக்கன் தன் மனைவியைப் பாம்பு கடித்துள்ளமையைக் கூறி, எஜமானிடம் மருந்து கேட்கிறான். எஜமான் அதனைப் பொருட்படுத் தாது, சம்பந்தமில்லாமல் " அந்த முத்துச்சாமி என்னதான் நினைத் துக் கொண்டிருக்கின்றான் ? எப்போதுதான் பணம் கொடுப்பான்" எனக்கணக்கனிடம் வினவ, கணக்கன்,

" இந்த மாதத்திலேயே கொடுத்துவிடுவதாகச் சொன்னான். வந்துவிடும். வைத்தியரிடம் பாம்புக்கடி மருந்தில்லையாம். உங்க ளுக்குச் செய்துகொடுத்தாராம் போனமாதம். அவசரமாகக் கொடுங் கள் என" இரு குறிப்புத்தொடர்களை இணைத்து உரையாடுகின்றான். அப்போதும் மனமிரங்காமல்

" விழுப்புரத்தில் இப்போது என்ன சினிமா நடக்கிறது? எனக் கேட்கும் எஜமானும் அப்போது "இந்திப்படம். கொஞ்சம் அவசரமாக் கொடுத்தால் தேவலே எஜமான்" என பதிலிறுக்கும் கணக்கனும் நமக்கு வயிற்றெரிச்சலோடு கூடிய நகையினை வழங்கு கின்றனர்கள். இற்றைநாள் மனிதர்களாகவே நடமாடுகின்றனர்.

04 : 02 கழுதையை எஜ்மான் வீட்டில் வைத்துப் பூட்டுவதும் அவரும், அவரது மனைவியும் கழுதையிடம் உதைபடுவதும், கணக் கன் வீட்டுக் கதவினை எஜமான் உடைப்பதும், வண்டி குடைசாய்வ தும் நல்ல நகைச்சுவைக் கட்டங்கள்.

04 : 03 இந்நாடகத்தில் இடத்திற்கேற்ப 'முண்டே' 'காமாட்டி' போன்ற இழிசினர் வழக்குகளையும் கவிஞர் கையாள் கின்றனர்.

05 : 00 'இன்பக்கடல்' - காதல்பித்திற்காகப் பட்டுவையும் திரண்ட சொத்திற்காகத் தங்கத்தையும் மணக்க விரும்பும் அர சப்பனின் சூழ்ச்சிக்கதையிது. தங்கம் விரும்பும் இளவழகனைத் திருமண நேரத்தில், அப்புயப்படுத்திய அரசப்பனின் சூழ்ச்சியினை, அவனது காதலி பட்டுவே உடைத்து, தான் அரசப்பனையும், தங்கம் இளவழகனையும் மணந்தமாறு செய்து மகிழும் இந்நாடகத்தின் இடையிடையே கவிஞரின் கவிதைகளும் இடையிட்டு நாடகப் போக்கினைத் தடைப்படுத்துகின்றன.

06 : 00 'சத்திமுத்தப்புலவர்' — "பழம்படுபனையின் கிழங்கு பிளந்தென்ன பவளக்கூர்வாய்" என உவமை காட்டிய முத்தப் புலவரின் சத்தியக்கதையினை, முத்துப்பாடல்களால் நாடகமாகப் படைத்துள்ளமை போற்றத்தக்கது. இந்நாடகம் கவிஞரின் 'எளிமைக்கவிதை'ப் படைப்பிற்கோர் இலக்கணமே.

" நீங்கள் ஏற என்ன தடை?

நசுங்கிவிடாது என் துடை?

குதிரை தொடங்கட்டும் பெரு நடை!

பாகனுக்குக் கொடுங்கள் விடை!"

எனவும்,

“மாணிக்கச் சுட்டி
காப்புக்கொலுசு கெட்டி
காலுக்கு மெட்டி
மற்றும் நகைகள் வைக்கப் பெட்டி
வெள்ளிச் சட்டி
தங்கக் கட்டி
யானைக் குட்டி
மிகநீளம் அம்மா இந்தப் பட்டி ''

எனவும் தொடரும் '' குறுங்கவிதைப் பகுதிகளை '' உடையதாகத் தொடரும் இந்நாடக உரையாடல் மேற்காணும் இதுபோன்ற சுவையான சொல்லமைப்புக்களால் சுவையுடையதாகத் திகழ்தல் கண்கூடு.

06 : 01 '' லொட்டு, லொட்டு '' எனும் ஒலிக்குறிப்பினைக் கூட 'தட்டு' என்பதற்கேற்பத் தொடர்களை அமைந்துள்ள பாரதி தாசன், ''சத்திமுத்தப்புலவரின் கதையின் இறுதியில் புதுமையான கூருகக் குடிதாங்கி ஒருவனின் வரவைக்காட்டி, புலவரின் செல்வத்தில் பங்கு கேட்பதனையும், புலவரும், குடிதாங்கியும் சண்டையிடுவதாயும், சண்டையில் புலவர் '' இதென்ன என் கையோடு வந்து விட்டது ?

இவன் தாடியா ?
இது இவன் முக மூடியா ?
இவனோர் கூத் தாடியா ?
எனக்கூறி, குடிதாங்கியே பாண்டியன் என அறிந்து,
'' அப்படியா பாண்டிய மன்னரே ?
அறியாமல் போனேன் முன்னரே ''

எனவும் கூறி மகிழும் முடிபினையும் காட்டியுள்ளது சிறந்ததொரு முடிபே.

06 : 02 கவிஞரின் கருத்தாற்றலும் சொல்லாற்றலும், புலவரும், அவர் மனைவியும் உரையாடும் இடத்திலேயும் மிளிர்கிறது.

மனைவி : "அரசர் உங்களையா புடைத்தார் ?"

புலவர் : இல்லை. சிறையில் அடைத்தார்.
என் பசியின் எலும்பை ஒடித்தார் "

என்னுமிடத்தில் 'பசியின் எலும்பை உடைத்தார்' என்கிறபோது கவிஞரின் திறம் இயல்பாக வெளிப்படல் காண்க.

07 : 00 இவ்வாறு நான்கு நாடகங்களின் அமைப்பிலும் பாரதிதாசனின் நாடக முனைப்புத் தெரிகின்றதாயினும், அவர்தம் கவிதை உணர்ச்சியே மேலோங்கி விளங்குகின்றது இந்நாடகங்களில் நாடகக் கூறுகளைக் காட்டிலும், கவிதைக் கூறுகளே மிகுதியாகக் காணப்படுதலாலும், சிறப்பாக இருத்தலாலும், பாரதிதாசனை ஒரு நல்ல கவிஞர் என்பதையே இந்நாடகங்களும் புலனாக்குகின்றன

சோழர்காலக் கலையும் — பண்பாடும்

(புலவர் கு. சின்னையன்)

முன்னுரை :-

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த இராசராசன் தன்வலியும் துணைவலியும் கொண்டு விளங்கினான். கலை நலம் மிக்க பெரிய கோவிலைக் கட்டினான். இக்கோவில் கட்டட கலைக்கும் சிற்ப ஓவியக்கலைகட்கும், சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இராசராச சோழனுடைய பூதவுடல் மறைந்து ஆயிரம் ஆண்டுகளாகின்றன. ஆனால் அவருடைய புகழுடல், பெரியகோவிலாய், சிற்ப ஓவியங்களாய், சைவத் திருமுறைகளாய் மெய்க்கீர்த்திகளாய் இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. பெரியகோவிலும் பிறவும், தமிழகத்தின் நாகரீகத்தையும் பண்பாட்டையும் விளக்கிக் கொண்டிருக்கின்றன.

இயற்றமிழ் கலை ;—

மக்கள் இயல்பாகப் பேசிவரும் உரைநடையும், செய்யுள்களும் இலக்கணங்களும் 'இயற்றமிழ் கலையாகும். இராசராசன் அடைந்த வெற்றிகளையும் அளித்துள்ள அறக்கட்டளைகளையும் பிறவற்றையும் செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் கோவில்புறச் சுவர்களில் பொறிக்கச்செய்திருக்கின்றான். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலி

ருந்து பல்லவ மன்னர்கள் தமிழகத்தில் ஆட்சிபுரிந்தபோது, வேற்று மொழியாளர் பலர் ,இங்கு குடியேறினர்கள். மேலும் இராசராசன் பல்வேறு மொழிகள் வழங்கும் நாடுகளில் படையெடுத்துச் சென்று அவர்களுள் பலரை இங்கு அழைத்து வந்திருக்கின்ருன். எனவே கோவில் சுவர்களில் பொறிக்கப்பட்டிருக்கும் மெய்க்கீர்த்திகளில் பிறமொழிச் சொற்களும் அக்காலத்தில் வழங்கிய தூயதமிழ்ச் சொற்களும் இடம் பெற்றிருக்கின்றன.

மேலும், இசைக்கலையைப் பரப்ப வேண்டுமென்றும், நாடகக் கலையை வளர்க்கவேண்டுமென்றும், விருப்பிருக்கின்ருன். இவ்விரு கலைகளின் வளர்ச்சிக்கு அறக்கட்டளைகளை அமைத்திருக்கின்ருன். இசைக்கலை வாயிலாக பக்தியை வளர்க்க விருப்பிய இராசராசன் திருமுறைகளிருக்குமிடத்தை நம்பியாண்டார் நம்பியின் உதவியால் தேடிக்கொடுத்தான்.

திருமுறைகள் :

திருஞானசம்பந்தர் அருளிச்செய்த தேவாரப் பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் தேவாரத்தை, நான்கு ஐந்து, ஆறு திருமுறைகளாகவும், சுந்தரர் தேவாரத்தை ஏழாந்திரு முறையாகவும். நம்பியாண்டார் தப்பி வகுத்தளித்த தார் பின்னர், மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எட்டாந்திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருர்த்தேவர் முதலியோர் இயற்றிய திருவிசை பாக்களையும் திருப்பல்லாண்டினையும் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், திருவால வாயுடையார் திருமுகப் பாசுரம் முதலியவற்றைப் பதினென்ரும் திருமுறையாகவும், வகுத்தருளினர். இதன்பின், அநபாய சோழன் காலத்தில், சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தைப் பன்னிரெண்டாம் திருமுறையாகச் சேர்த்திருக்கின்ருர்கள்.

சிவநெறி என்னும் செப்பயிர் தழைத்தோங்க, திருமுறைகளென்னும் மேகங்களைத்திரட்டி அருள் மழை பொழியச்செய்து, இன்பமென்னும் கதிர் விளையச் செய்திருக்கின்ருன். இத்திருமுறைகளைப் பரப்பும் வாயிலாக இசைக்கலையையுப் வளர்த்திருக்கின்ருன். அறியாமை என்னும் இருள் மிகுந்த இவ்வுலகத்தில் அருள்வழியையறிய விரும்புவோர்க்கு இவை, ஞான விளக்காக விளங்கி வருகின்றன.

இலக்கியக்கலை:-

இராசராசன் காலத்தில் இயற்றிய திருவிசைப்பா இலக்கியக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. சான்றோர், தம்மறிவாலும் அனுபவத்தாலும் சிறந்த உண்மைகளைக் கண்டிருக்கின்றார்கள், இவ்வுண்மைகளை யாவரும் அறிந்து இன்புற வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட கலையே இலக்கியக்கலையாம். மக்கள், அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் அடையவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இக்கலைகள், அக்காலத்தில் செய்யுள் வடிவிலே தோன்றியிருக்கின்றன. இக்காலத்தில், இக்கலை, உரைநடை வடிவிலும், வெளிவந்திருக்கின்றது. ஆனால், இலக்கியங்கள் எல்லாம் பல்வேறு நோக்கங்களோடு வெளிவந்திருக்கின்றன.

இலக்கியப் பண்பாடு:-

செய்யுள் வடிவில் வெளியான அக்கால இலக்கியங்களில் இலக்கியச்சுவைகள் இயைந்திருக்கின்றன. எதுகையும் மோனையும் இணைந்திருக்கின்றன. சொல்லழகும் பொருளழகும் நிறைந்திருக்கின்றன. கவிநயமும் கற்பனைத்திறமும் கலந்திருக்கின்றன. உணர்ச்சியும் உயிரோட்டமும் ஒன்றியிருக்கின்றன. எண்வகைச் சுவைகளும் இயைந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பனவாயிருக்கின்றன. படித்தும் கேட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுதற்கேற்றவாயிருக்கின்றன. இதனால்தான் அக்காலத்தில் தோன்றிய இலக்கியக்கலைகள் மட்டுமல்லாமல், சோதிடக்கலை, மருத்துவக்கலை முதலியவைகளையெல்லாம் செய்யுள் வடிவிலே தோன்றியிருக்கின்றன.

சிறிய கண்ணாடியானது தன்னெதிரில் இருக்கும் பெரியமலை முதலியவற்றையெல்லாம் தன் வடிவத்திற்குள் அடக்கிக்காட்டுகின்றன. இவ்வாறே, சிறிய செய்யுட்கள் பல்வேறு வகையான கருத்துக்களைத் தன்னுள் அடக்கிக் காட்டுகின்றன. மேலும் அவை இசையோடு பாடுதற்கும் படித்தற்கும் ஏற்றனவாயிருக்கின்றன. எனவேதான், இராசராசன் செய்யுள் இலக்கியங்களை விரும்பி இருக்கின்றான். இராசராசன், தன் வெற்றிச் சிறப்புக்களையெல்லாம் செய்யுள் வடிவில் மெய்க்கீர்த்திக்களாய்ப் பாடச் செய்ததற்கும், கருவூர்த்தேவர் திருவிசைப்பாக்களை இசைத்திருப்பதற்கும் காரணம் இசையின் மூலம் இலக்கியக் கலையை வளர்ச்சியடையச் செய்யலாம் என்பதேயாகும்.

கட்டடக்கலை :-

இராசராசன் கட்டிய தஞ்சைப்பெரியகோவில், கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. இயலிசை நாடக வளர்ச்சிக்கும், இடமளிப்பதாய் விளங்கி இருக்கின்றது.

இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பெரிய கோவில், இன்றும் வலிமை குன்றாமல், உதிர்ந்து விழாமல், உறுதியுடன் நன்கு விளங்குகின்றது. ஆனால், நம் கண்முன் கட்டப்பட்ட இக்காலக்கட்டடங்கள் பல உருக்குலைக்கின்றன. சில கட்டடங்கள் வீழ்ந்தியிருக்கின்றன. இதனால் நாம் சில உண்மைகளை அறிகின்றோம்.

"அக்காலத்தில் படித்துப்பட்டம் பெற்ற நிபுணர்கள் இல்லை. ஆனால், அக்கலையில் அனுபவம் பெற்ற அறிஞர்கள் இருந்திருக்கின்றார்கள். உறுதியாக இருக்கும் சிமெண்ட் கண்டுபிடிக்கப்படவில்லை, ஆனால்; உதிர்ந்து விழாத நல்ல சுண்ணம்பு இருந்திருக்கின்றது. எனவேதான், பழக்காலத்தில் எழுந்த கட்டடங்கள் இன்னும் உறுதியுடன் எழுந்து நிற்கின்றன. பெரிய கோவிலில் அமைந்துள்ள சிற்ப ஓவியங்கள் சீரியனவாய் அமைந்திருக்கின்றன.

ஓவியங்கூறும் உண்மைகள் :-

பெரியகோவில் கருவறைச் சுவரின் மேற்புறத்தில் அமைந்திருக்கும் ஓவியங்கள் உயிருள்ளனவாய் உயர்ந்த உண்மைகளை அறிவிப்பனவாயிருக்கின்றன. இவ்வோவியங்களை நாயக்க மன்னரின் ஆட்சிக்காலத்தில், சுண்ணம்பு பூசி மறைத்திருக்கின்றார்கள். உண்மையை எத்தனை நாட்களுக்கு மறைத்து வைக்க முடியும்? என்றேனும் ஒருநாள் அஃது வெளியாகுமல்லவா? இதற்கேற்ப நாயக்கமன்னர்கள் பூசிய மேற்பூச்சும். அதன்மீது எழுதப்பட்ட பிற்கால ஓவியங்களும். நாளடைவில் உகிர்ந்து மறைந்துவிட்டன. உள்ளே மறைக்கப்பட்டிருந்த சோழர்கால ஓவியங்கள். 'குன்று மணி குப்பையிலே கிடந்தாலும் நிறம் குன்றாது' என்னும் பழமொழிக்கேற்ப ஒளியுடன் விளங்கின. இவ்வுண்மையைக்கண்ட புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காவினர் இவற்றை இன்றும் கண் போல் காத்துவருகின்றார்கள்.

இராசராசன் தில்லைக்குச் செல்லும் காட்சியும், சுந்தரர் வெள்ளை யானை மீதேறி கைலைக்குச் செல்லும் காட்சியும், இலிங்க அமைப்புக்கு மூல காரணமாயிருந்த கருவூர்த் தேவரின் திருவுருவமும் பிறவும் அச்சுவரில் வரையப்பட்டிருக்கின்றன.

அன்று எழுதிய ஓவியங்கள், இன்று எழுதியதுபோல் காணப்படுகின்றன. இராசராசனும் அவனுடைய மனைவியும் பிறரும் அணிந்திருந்த ஆடைகளும் அணிகளும் அவ்வோவியங்களில் இனிதே காணப்படுகின்றன. இவை அக்கால நாகரீக வளர்ச்சியையும் பண்பாடுகளையும் உணர்த்திக்கொண்டிருக்கின்றன.

கருவறைச்சுவரில். கரூர்த் தேவரின் உருவம் எழுதப்பட்டிருப்பதிலிருந்து. இராசராசனின் செய்நன்றி மறவாப்பண்பினை நாம் அறிந்துகொள்கின்றோம். சுந்தரர் கைலைக்குச் செல்லும் காட்சியை வரைந்திருப்பதிலிருந்து. தானும் அத்தயை நிலையைய அடைய விருப்பியிருக்கின்ருன் என்பதை அறிந்துகொள்கின்றோம். சிதம்பரத்திற்குச் செல்வதாக எழுதப்பட்டிருப்பதிலிருந்து அவனுடைய மெய்யுணர்வை அறிந்து கொள்கின்றோம்.

பெய்யுணர்வு :-

"பிறவிப் பெருங்கடலை நீந்திச் செல்ல விருப்புவோர்க்கு ஐம்பொறிகளாகிய பகைவர்கள், இடையூறு புரிந்து வருகின்றார்கள். பிறவிப் பெருங்கடலைக் கடக்க விரும்புவோர்க்கு அஞ்சாதே அருள் புரிபவன் தில்லை நடராசப் பெருமான் ஆவான். ஆதலின் அவனைக் கண்டு வழிபடுவதற்காகவே மக்கள் பிறவியில் தோன்றியிருக்கின்றோம். என்னும் உண்மை உணர்வை இராசராசன் பெற்றிருந்திருக்கின்றான், என்பதை,

" இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சலென் றருள் செய்வான் கோவில் "

என்று. கோயில் திருவிசைப்பாச் செய்யுளடிகளில் கரூர்த்தேவர் கூறியிருப்பதனால் அறிந்து கொள்கின்றோம். பிற்காலத்தில் தோன்றி வளர்ந்த சித்தாந்தக்கலை உணர்வுகளை, கரூர்த்தேவர் கூறியிருப்பதிலிருந்து, 'இராசராசனும் அக்கலை உணர்வைபெற்றிருக்கின்றான்' என்றறிகின்றோம்.

மெய்யுணர்வு :—

" பாலுடன் சேர்த்த நீர் நெருப்பில் வைத்துக் காய்ச்சிய அளவில் பாலைவிட்டு நீங்கி விடுதல் போல. இறைவனை, யோக மார்க்கத்தால் வழிபடுவோர்க்கு, பாவம் நீங்கி. புண்ணியமே எஞ்சி நிற்கின்றது " என்னும் கருத்தை விளக்க விரும்பிய கரூர்த்தேவர்

" பண்ணிய தழல்காய் பாலளா நீர்போல்

புண்ணியம் பின்சென்று அறிவினுக்கறிய

புகுந்ததோர் யோகினிற் பொலிய "

என்று கூறியிருப்பதனுலறிகின்ருேம்.

மேலும் பசுமையான மட்பாண்டங்கள் மழைத்துளிகள் பட்ட அளவில் நனைந்து கரைந்து விடுகின்றன. ஆனல் நெருப்பில் சுடப் பட்ட மட்கலன்கள் நீரில் கிடந்தாலும் கெடுவதில்லை. மாதர்களோடு மயங்கிக்கிடந்த மனம் இறைவனின் திருவருளாகிய நெருப்பில் மூழ்கியபின் மாறிவிடுகின்றது. இதனல் சிற்றின்பத்தால் விளையும் தீங்குகள் தோன்றுவதில்லை" என்னும் கருத்தை விளக்கிக்கூறிய கருர்த்தேவர், இறைவனின் அருள்பெருநிலைக்குப் பசுமையான மண் பாண்டத்தையும், அருள்பெற்ற நிலைக்கு தீயில் சுட்ட பாத்திரத்தை யும், எடுத்துக் காட்டியிருப்பது, எண்ணுந்தோறும் நம்முள்ளத்தில் இன்பமூட்டுவதாக அமைந்திருக்கின்றது, இத்தகைய உயரிய கருத்துக்களை,

:' எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்

இன்றுளி பட நனைந் துருகி

அழலை யாழ் புருவம் புனலொடு கிடந்தாங்கு

ஆதனேன் மாதரார் கலவித்

தொழிலை யாழ் நெஞ்சம் இடர்ப்படா வண்ணம்

தூங்கிருள் நடுநல்யா மத்தோர்

மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்

மருவிடம் திருவிடை மருதே ',

என்ற திருவிசைப்பாவில் கூறியிருப்பதிலிருந் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் உயர்ந்த மெய்யுணர்வு உடை யவர்களாக விளங்கிருக்கின்ருர்கள். என்பதையும், இராசராசனும் இத்தகைய உணர்வு உடையவனக விளங்கியிருக்கின்ருன் என்பதை யும்நாம் நன்கு அறிந்துகொள்கின்ருேம். கருர்த்தேவர், இங்ஙனம் கூறியிருக்கும் திருவிசைப்பா பதிகங்கள் மெய்யுணர்வையளிப்பன வாகவும், இலக்கிய பண்பை விளக்குவனவாகவும் அமைந்திருக்கின் றன.

முடிவுரை :—

இராசராசன், கட்டடக் கலைக்கும், சிற்ப ஓவியக்கலைகட்கும் முத்தமிழ்க் கலைகட்கும் உயிர் கொடுத்திருக்கின்றான். ''யாதும் ஊரே யாவருங் கேளிர் ''என்னும் தமிழ்ப் பண்பைத் தன் வாழக்கையில் கடைப்பிடித்திருக்கின்றான். இன்றைய மக்கள் கூறும் தேசீய ஒருமைப் பாட்டிற்கு அவன் முன்னோடியாகவே விளங்கியிருக்கின்றான்.

இராராசனும் அவன் வழியில் தோன்றியவர்களும் இயலிசை நாடகக் கலைக்கு ஊக்கமளித்ததனால் தான், அக்கலைகள் வாழ்ந்தன, ர்வளந்தன; தழைத்தன. வாழ்க கலை. வளர்க கலைப்பண்பு.